DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.334/2022 | Deposition of Witness for : PW5 |
| Name : முத்துலிங்கம் | Father/Husband Name : வெங்கடேஷன் |
| Age : 26 | Village : பெருமாள்குளம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : காய்கறி வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 August 2025
Accused A3 present.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது பெருமாள்குளத்தில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும். எனது ஓனர் ஆவார். எதிரிகளை சம்பவத்தின் போது தெரியும். கடந்த 25.07.2022 ஆம் தேதி நாங்கள் ஏரல் சந்தையில் காய்கறி வியாபாரம் செய்து TATA ACE வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். வாகனத்தை அ.சா.1 ஓட்டிக்கொண்டு வந்தார். அந்த வாகனத்தில் நானும் நவீன்குமார், கிருஷ்ணமூர்த்தி மற்றும் பெருமாள் ஆகியோர்கள் வந்தோம்.

2. இரவு 11 மணியளவில் வெள்ளமடம் முத்துநகர் அருகே வரும்போது எதிரிகள் அனைவரும் எங்களை புன்டா மவனே என்று ஆபாசமாக பேசி இனிமேல் இந்த வழியாக வந்தால் உங்களை கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். வண்டியின் முன் கண்ணாடியை கல்லைக் கொண்டு உடைத்தார்கள். மற்றும் வண்டியில் இருந்த காய்கறி மூடைகள் மற்றும் தராசை எதிரிகள் கீழே இழுத்துப் போட்டார்கள். அ.சா.1 யை எதிரி துரை கல்லைக் கொண்டு தலையின் பின்பக்கம் எறிந்தார். பின்பு அனைத்து எதிரிகளும் சேர்ந்து அ.சா.1 யை கைகளால் உள்ளங்கை, இடதுகால் முட்டி, விலா எழும்பு ஆகிய பகுதிகளில் தாக்கினார்கள். மற்றும் எதிரிகள் எங்களையும் தாக்கினார்கள். பின்பு நாங்கள் வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டோம். அ.சா.1 சிவபெருமாள் மற்றும் அ.சா.3 கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் செல்போன்களை காணவில்லை. காயம்பட்ட அ.சா.1 சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார். இதுசம்பந்தமாக அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் அ.சா.1 சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான். என்னுடன் அப்போது செல்போன் இருந்தது என்றால் சரிதான். என்னுடைய முதலாளி அ.சா.1 சிவபெருமாள் ஊர் பஞ்சாயத்து தலைவர் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று இரவு 12-01.00 மணியளவில் நாசரேத் காவல்நிலையத்திற்கு புகார் கொடுத்தார். மறுநாள்


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.08.26 17:17:11 +0530

காலையில் போலீசார் எங்களை விசாரிக்க வந்தார்களா என்றால் வரவில்லை, நாங்கள் தான் மறுநாள் காலையில் சென்றோம். போலீசார் சொன்னதன் பேரில் தான் அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றார் என்றால் சம்பவம் நடந்த அன்று இரவே அ.சா.1 மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்.

4. முதலில் மருத்துவமனைக்கு சென்றுவிட்டு மறுநாள் காலை காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். அ.சா.1 சம்பவம் நடைபெற்றவுடன் புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். போலீசார் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தை பார்த்தார்களா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. நாங்கள் வந்த வாகனம் வேறு எங்கோ விபத்தில் சிக்கியது என்றாலும் போலீசார் ஆலோசனையின்படிப பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோன்று சம்பவ இடத்தில் வைத்து சம்பவ நேரத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றல் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 என்னுடைய முதலாளி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன், எனக்கு எழுத படிக்க தெரியும்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.08.26 17:17:18 +0530

Judicial Magistrate, Sathankulam.